# மேட்டூர் சார்பு நீதிமன்றம்

| O.S. No. 85/2019 | Date : 21.03.2023 | PW1 |
| --- | --- | --- |
| Name: துரைசாமி | த/பெ. **அம்மாசி (எ) அம்மாசி கவுண்டர்** | |
| Evidence Recorded Time: 04.06 P.M. to 04.40 P.M | | |

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி:-**

பவர் பத்திரத்தை நான் படித்து பார்த்தேனா என்றால் இல்லை படித்து காட்டினார்கள். அந்த பவர் பத்திரம் எந்த வருடம் பதிவு செய்யப்பட்டது என்று தெரியாது. எந்த ஊரில் பதிவு செய்யப்பட்டது என்ற விவரமும் எனக்கு தெரியாது. அந்த பவர் பத்திரம் எனக்கு கிரையம் செய்து கொடுப்பதற்கு முன்பு பவர் பத்திரத்தை பவர் ஏற்படுத்தி கொடுத்தவர்கள் ரத்து செய்துவிட்டார்களா என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது, நான் விசாரித்து தெரிந்து கொள்ளவில்லை என்றால் சரிதான். நிலத்தை எனக்கு கிரையம் செய்து கொடுப்பதாக யார் சொன்னார்கள் என்றால் நானாகத்தான் சென்று கிரையம் கேட்டேன், அவர்கள் கிரையம் கொடுப்பதாக சொன்னார்கள். கிரைய தேதிக்கு முன்பாக எப்போது சென்று கேட்டேன் என்றால் ஒரு மாதத்திற்கு முன்பு சென்று கேட்டேன். 2 1/2 செண்ட் நிலத்திற்கு மொத்தமாக விலை பேசப்பட்டது. மேற்படி 2 1/2 செண்ட் நிலத்தைதான் பத்திரத்தில் குறிப்பிட்டு எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் முந்தைய குறுக்கு விசாரணையில் சொன்னது போல 25 X 48 1/2 சதுரடி கணக்கில் 2 3/4 செண்ட் நிலம் வருகிறது என்றால் அதுபற்றி தெரியாது. கிரைய ஆவணத்தில் 1091 1/2 சதுரடி என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நிலத்தை வாங்குவதற்கு முன்பு சர்வேயரை வைத்து நிலத்தை அளந்து பார்த்தேனா என்றால் அளந்து பார்க்கவில்லை. கிரையம் செய்து கொடுத்த தேதியில் யார் கிரையம் செய்து கொடுத்தார்கள் என்றால் அறிவுக்கொடியின் அம்மாதான் கிரையம் செய்து கொடுத்தார். கிரையத்திற்கான பணத்தை பெற்றுக்கொண்டு சென்றுவிட்டார்கள், நிலத்தை அளந்து என்னிடம் ஒப்படைக்கவில்லை. கிரையம் பெற்ற பின்னர் நான் பத்திரப்படி அளந்து கொள்ள நடவடிக்கை எடுத்தேனா என்றால் இல்லை. பட்டா மாறுதலுக்கு விண்ணப்பம் கொடுத்தேனா என்றால் கணினி பட்டா வாங்கி வைத்துள்ளேன். நீதிமன்றத்தில்

பட்டாவை தாக்கல் செய்துள்ளேனா என்றால் நினைவில்லை. 2009–ம் ஆண்டில் ஓட்டு வீடு கட்டினேன். அதற்கு பஞ்சாயத்தில் உரிய அனுமதி பெற்றேனா என்றால் இல்லை. எப்போதிலிருந்து வீட்டு வரி செலுத்தி வருகிறேன் என்றால் கிரையம் பெற்ற மூன்று மாதத்திலிருந்து வீட்டு வரி செலுத்தி வருகிறேன். பிரமாண பத்திரத்தில் உள்ள சங்கதிகளை நான் தான் என் வழக்கறிஞருக்கு சொன்னேன் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்த வீட்டு வரி ரசீதில் பழைய எண்.2128 என்று பிரமாண பத்திரத்தில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். அதில் பழைய எண் என்று குறிப்பிட்டுள்ளேன் அதற்கு புதிய வரி விதிப்பு எண் என்னவென்றால் மேற்படி பழைய வரி விதிப்பு எண்ணில் தற்போது வரை வரி செலுத்தி வருகிறேன். வீட்டு வரி செலுத்த எந்த ஆண்டு முதல் உத்தரவு கொடுக்கப்பட்டது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. பஞ்சாயத்தில் விண்ணப்பம் கொடுத்தேனா என்றால் கொடுத்திருப்பேன் நினைவில்லை. வரி விதிப்பிற்கு உத்தரவு கொடுத்தார்களா என்றால் அவ்வாறு உத்தரவு பெற்றேனா என்று நினைவில்லை. அந்த உத்தரவை வாங்கி ஒப்படைக்க தயாராக உள்ளேனா என்றால் இல்லை. வீட்டு வரிக்கு வரி விதிப்பு எண்.2584 என்று கூறியுள்ளேன் என்றால் அந்த வரி விதிப்பு ரசீதுகளை நீதிமன்றத்தில் ஒப்படைத்தேனா என்றால் இல்லை. 2584 எண்ணில் வரி ரசீதுகளை ஒப்படைக்கவில்லை என்றால் இருக்கிற ரசீதுகளை ஒப்படைத்துள்ளேன். எங்கள் வீட்டிற்கு வடக்கு புறம் கிருஷ்ணம்மாள் உள்ளார் என்றால் தற்போது குடிசை வீடு போட்டுள்ளார். பெரியசாமியும், அவரது மாமியாரும் சேர்ந்து தான் அந்த சாலையை போட்டுள்ளார்கள். பெரியசாமியை இந்த வழக்கில் தரப்பினராக சேர்த்துள்ளேனா என்றால் இல்லை. கிரைய பத்திரத்தில் யார் சாட்சி கையொப்பம் போட்டார்கள் என்றால் என் அப்பா ஒரு சாட்சியாக கையெழுத்து போட்டுள்ளார், மற்றொருவர் ஆங்கிலத்தில் போட்டுள்ளதார் அவர் பெயர் தெரியவில்லை. அவர் பெயரை வாசித்து காட்ட தெரியாது என்கிறார். என் அப்பாவும் அவருடன் வந்தவரும் சாட்சி கையொப்பம் போட்டார்கள். அசல் வழக்கு எண்.746/1985 வழக்கில் பிறந்த உத்தரவின் படி இடத்தை காலி செய்து கே.ஆர்.ஜியின் மனைவி அறிவுக்கொடியிடம் ஒப்படைத்து சென்றார். சாட்சி தற்போது எனது தந்தை யாரிடம் ஒப்படைத்தார் என்று தெரியவில்லை என்று கூறுகிறார். 2002 ம் ஆண்டு எனக்கு 22 வயதிருக்கும். என் அப்பாவை நிலத்தை என் அப்பா நிலத்தை

அகிலாராமனிடம் ஒப்படைக்க சொல்லி நீதிமன்றம் மூலம் தெரிவித்த சங்கதிகள் எனக்கு தெரியுமா என்றால் என் அப்பா எனக்கு சொல்லியுள்ளார். எனக்கு நேரடியாக தெரியாது. பிரதிவாதி என்ன பதிலுரை தாக்கல் செய்த விவரத்தை தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை.

(வழக்கறிஞர் வேண்டுகோளின் பேரில் குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது)

ஒம்/–PW1,

இதில் கண்ட சங்கதிகள் என் முன்னிலையில் சாட்சியிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் /கைரேகை செய்தார்.

ஒம்/–S.முத்துராமன்,
சார்பு நீதிபதி, மேட்டூர்.